**கப்பற்றுறை அபிவிருத்தி நிதியம் - 2013**

கப்பற்றுறை அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட நிதியத்தின் மாற்றக் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களுக்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பல மூலாதாரங்களுக்கு பொருண்மையான அளவில் தாக்கமளிக்கக்கூடியதாக இருந்தது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதியத்தை முறையற்ற விதத்தில் நடாத்தப்படல் மற்றும் சட்டரீதியாக மேலும் உறுதிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.**

கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபித்து 39 ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் நிதியத்தை சட்டரீதியாக மேலும் வலுப்படுத்துவதற்காக பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தைச் சமர்ப்பித்து சட்டரீதியான நிதியமொன்றாகப் பேணுவதற்குத் தேவையான சட்ட ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நிதியத்தின் நிர்வாகத்தை நெறிப்படுத்துவதற்காக இது வரை கட்டுப்பாட்டுச் சபையோ அல்லது பணிப்பாளர் சபையோ நியமிக்கப்பட்டிராததுடன் கப்பற்துறையின் அபிவிருத்திக்காக எவ்வித பங்களிப்பும் வழங்கப்படவோ அல்லது இதற்காக திட்டமோ இந் நிதியத்தினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் படி, இந் நிதியத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடின்மை அவதானிக்கப்பட்ட போதிலும் இதற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களுக்காக எந்த கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 அரச நிறுவகங்களிலிருந்து கிடைக்கப்பெறவேண்டிய ரூபா 460 மில்லியன் கூட்டுத்தொகையானது ஐந்தொகையில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இந் நிதி நீண்ட காலமாக பெறவேண்டிய பெயரளவிலான மீதியாக மாத்திரம் காணப்பட்டது. எவ்வாறெனினும், இப் பணத்தின் பெறுவனவு நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டமையால் இதற்காக ஐயக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதற்கோ அல்லது அறவிடுவதற்கோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்திற்கு உரித்தான எனினும் வேறு நிறுவகத்தின் பொறுப்பில் உள்ள ரூபா 94,598 கிரயமான நிலையான சொத்துக்கள் ரூபா 16,342 ஆல் பெறுமானத்தேய்விடப்பட்டு திரண்ட நிதியத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், மேற்குறித்த (அ) மற்றும் (ஆ) பந்திகளில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக சொத்துப் பதிவேடு, காலப்பகுப்பாய்வு, மீதிகளின் உறுதிப்படுத்தல்கள், பௌதீக மெய்மையாய்வுச் சபை அறிக்கை ஆகியன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அச் சொத்துக்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கோ அல்லது உறுதிப்படுத்தப்படுவதற்கோ முடியாதிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

நிதியம் மீளாய்வாண்டிற்காக வருமானச் செலவினக் கூற்றைச் சமர்ப்பித்திருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திரண்ட நிதியத்தின் வேறுபாட்டுக் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு உரித்தான நிலையான சொத்துப் பெறுமானத்தேய்வாகக் காணப்படும் ரூபா 16,342 தொகையான செலவினம் மாத்திரம் ஏற்கப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,342 ஆகக் காணப்பட்டது. ஆகையால் முன்னைய ஆண்டிற்கான ரூபா 19,342 தொகையான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 3,000 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தரகுப் பணம் அறவிடப்படுவதற்கு எதிராக கப்பல் முகவர் நிறுவகத்தால் கப்பல் இடவசதி ஒதுக்கீட்டு மத்திய பணியகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மூலம் பணத்தை அறவிடுவதைத் தடுக்கும் கட்டளை 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் நிதியத்தின் பிரதான வருமான மூலமான கப்பல் இடவசதி ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட தரகுப் பணம் முன்னைய 6 ஆண்டுகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே கப்பல் இடவசதி

ஒதுக்கீட்டு மத்திய பணியகம் கலைக்கப்பட்டிருந்தது. மேலும் நிதியத்திடமிருந்த நிலையான சொத்தாக கணனியும் நிழற்படப் பிரதி இயந்திரங்கள் சிலவும் மாத்திரம் இருந்தமையால் எவ்வகையிலேனும் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கோ அல்லது செயற்படுத்துவதற்கோ நிதியத்திற்கு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளமையால் எவ்வித செயலாற்றலும் அறிக்கையிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

நிதியத்தால் 2011 யூன் மாதம் முறையே ரூபா 35,000,000 தொகையும் ரூபா 25,000,000 தொகையுமாக ரூபா 60,000,000 கூட்டுத்தொகையான கப்பற்துறை செயற்பாட்டு கூறிற்குத் தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக அரச கடற்படை கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 46,476,266 தொகை செலவிடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 13,523,734 தொகை 14 மாதங்களுக்கு மேலான காலமாக விளைவற்று வெளி நிறுவகத்தில் இருப்பதற்கு இடமளித்து பின்னர் அத் தொகை 2012 ஆகஸ்ட் 12 ஆம் திகதி திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயணிகள் கூறின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூலதனச் செலவினத்தை ஏற்பதற்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 29,686,523 தொகையான கட்டிட வாடகை, போக்குவரத்து, ஊழிய ஊதியம், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய சிறு செலவினங்கள் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 11,883,238 கூட்டுத்தொகையான பணத்தைச் செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயணப் பொதி “ஸ்கான்“ உபகரணம், உலோகப் பொருட்களை இனங்காணும் உபகரணம் மற்றும் இரும்பு ட்ரொலி என்பன எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு கட்டணம் அறவிடப்படாது வழங்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 4,906,505 கூட்டுத்தொகையான கணனி மற்றும் காரியாலய மரத்தளபாடங்கள் வரிசை அமைச்சிற்கும் அரச கடற்படை கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டிருந்தன.

ஆகையால் பயணிகள் கூறை மேம்படுத்துவதற்காக கடைத்த தொகையில் ரூபா 46,476,266 உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படாது வேறு செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் பயனற்ற செலவினமாகியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர்
(இ) நிலையான சொத்துக்கள்